**STARTING TIME 11.06 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 11/2025**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff solemnly affirmed by Tmt. S. Malliga, Junior Assistant of this court, on 09.10.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **கிருஷ்ணா ரெட்டி** Father's Name : Narayanasamy Reddy

Address : 36, Vinayagar Koil Street, Panavattampadi Village,
Nemili Taluk, Ranipet Distrit.

Age :73

**மனுவின் பெயரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

35. எனது அப்பாவிற்கும், அவரது உடன்பிறந்தவர்களுக்கும் இடையே ஏற்கனவே வாய்மூல பாகப் பிரிவினை ஏற்பட்டது என்றால், சரிதான், அதனால் தான் எனது பெரியப்பா ஆதிமூல ரெட்டி, எனது தகப்பனார் நாராயணசாமி ரெட்டிக்கு சர்வே எண் 502-ல் 35 சென்டை விற்பனை செய்துள்ளார். அந்த வாய்மூல பாகத்தில் அந்த 35 செண்ட் சொத்து எனது பெரியப்பா ஆதிமூல ரெட்டிக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்பதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால், இல்லை. நான் சொல்வது தவறு என்றும், மேற்படி பாகத்தில் ஆதிமூல ரெட்டிக்கு சர்வே எண் 502-ல் 20 செண்ட் மட்டும் தான் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால், சரியல்ல.

36. நான் தாவா சொத்துக்களுக்கான அ–பதிவேடு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், செய்துள்ளேன். நான் அது போல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. அந்த அ–பதிவேட்டில் சர்வே எண் 502–ல் உள்ள சொத்து எத்தனை உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால், 502/1 மற்றும் 502/2 என இரண்டு உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

37. என் பெயரில் எந்த சர்வே எண்ணிற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால், 502/2–ல் உள்ள சொத்துக்கு என் பெயரில் பட்டா உள்ளது, 502/1–ல் உள்ள சொத்தில் 15 செண்ட சொத்திற்கு கணேசன் பெயரில் கூடுதலாக பட்டா வழங்கப்பட்டுள்ளது. எனது பெரியப்பா ஆதிமுலத்திற்கு பாகத்தில் 20 செண்ட் மட்டும் தான் ஒதுக்கப்பட்டது என்றும், அதனால் தான் 20 செண்டுக்கு மட்டும் என் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

38. என் பெயருக்கு 20 செண்டிற்கு மட்டும் பட்டா வழங்கப்பட்ட விவரம் எனக்கு அ–பதிவேடு வழங்கப்பட்ட சமயத்திலேயே தெரியும் என்றும், வழக்கிற்காக வேண்டியே 2019–ம் ஆண்டு தான் அந்த விவரம் தெரியவந்தது என பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

39. பிரதிவாதிகளின் பதிலுரையில் 1200 அடி என்பதை 1200 மீட்டர் என தவறுதலாக சொல்லப்பட்டுள்ளது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது.

1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam.
Date: 2025.10.09 16:32:34 +0530

**ENDING TIME: 11.17. A.M.**